

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தொட்டில்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.7.94 கோடி மதிப்பில் பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்ட மறுசீரமைப்பு பணிகளை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அடிக்கல் நாட்டி வைத்து, பேசினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி எம்.பி., மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் எம்.எல்.ஏ., டி.ரமேஷ்பாபு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.





தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களால் அறிவிக்கப்பட்டு புதியதாக கட்டப்பட்டு வரும் உதகை மார்க்கெட் கடைகளை அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் நேற்று முன்தினம் (7.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் உதகை நகராட்சி ஆணையாளர் திரு.கணேசன், பொறியாளர்கள் செண்பகவல்லி, சண்முகசுந்தரம் மற்றும் மாவட்ட கழக பொருளாளர் நாசர் அலி,தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், நகர செயலாளர் ஜார்ஜ் மற்றும் நகராட்சி அதிகாரிகள் உள்ளனர் .

## மேட்டூர் வட்டத்தில்

# ரூ.7.94 கோடி மதிப்பில் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள்!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் அடிக்கல்!

சேலம், அக்.9-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தொட்டில் பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.7.94 கோடி மதிப்பில் பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்ட மறுசீரமைப்பு பணிகளை அடிக்கல் நாட்டி வைத்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தொட்டில் பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.7.94 கோடி மதிப்பில் பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்ட மறுசீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டி வைத்தார். பின்னர், சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலை நோக்கு பார்வையோடு தமிழ்நாட்டை உலகளவில் தலைசிறந்த மாநிலமாக உயர்த்துவதற்காக சிறப்பான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் மேட்டூர் வட்டம், தொட்டில்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.7.94 கோடி மதிப்பில் பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்ட மறுசீரமைப்பு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் ஒருங்கிணைந்த கூட்டு குடிநீர் வழங்கல் திட்டம் (CWSS) 1995 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது 2025 ஆம் ஆண்டில், திட்டம் தனது இறுதி நிலையை (Ultimate Stage) எட்டியுள்ளது. இத்திட்டத்திற்கு காவிரி ஆற்றின் செக்கானூர் தடுப்பனை கீழ்புறம் உள்ள ஆற்றின் கரையோரத்தில், ஏற்கனவே பயனில் உள்ள நீர் எடுப்பு கிணற்றில் நீர் சேகரிப்பட்டு அங்கிருந்து தொட்டில்பட்டி 8.00 MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, சுத்திகரிக்கபட்டு பழைய 300 mm AC மற்றும் 63mm முதல் 160mm PVC வரை உள்ள குழாய்கள் மூலம் பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.

தற்போது பழைய AC / PVC குழாய்களின் விநியோகத்தாலும் பல இடங்களில் பலவீனமடைந்து, அடிக்கடி கசிவுகள் மற்றும் வெடிப்புகள் ஏற்படுவதால் நீர் வீணாகி, விநியோகம் தடைபடும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பம்பு தொகுதிகள் (pumpsets) பயன்பாட்டு காலத்தை கடந்துவிட்டன. இதனுடன் தொடர்புடைய மின்சார மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு மாற்றம் மற்றும் மேம்படுத்தல் தேவைப்படுகிறது.

தடையற்ற மற்றும் திறமையான நீர் விநியோகத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், மறுசீரமைப்பு (revamping) திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க பொருட்டு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் குடிநீர் அளவை கழித்து இடைக்கால (2039) மக்கள் தொகையான 84,772 நபர்களுக்கு 5,934 MLD குடிநீரும் உச்சகால (2054) மக்கள் தொகையான 90,875 நபர்களுக்கு 6.360 MLD குடிநீரும் வழங்க வகையில் இத்திட்டம் செயல்படுத்த பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர் டி.ரமேஷ்பாபு, உதவி நிர்வாகப்பொறியாளர் திருமதி இந்து, பி.என்.பட்டி பேரூராட்சி தலைவர் பொன்னுவேல், மேட்டூர் நகர்மன்ற துணைத் தலைவர் காசிவிஸ்வநாதன், மேட்டூர் வட்டாட்சியர் ரமேஷ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் ‘உங்களுடன் ஸ்டாலின்’திட்ட முகாம் நடைபெற்றது. முகாமிற்கு விராலிமலை தாசில்தார் ரமேஷ் தலைமை தாங்கினார். இதில் பொதுமக்கள் வழங்கிய பல்வேறு மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி.மணி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், ஒன்றிய செயலாளர் அ.இளங் குமரன் மற்றும் விராலிமலை சிவா, மெடிக்கல் குமார், என்.வீராச்சாமி, த.ரெங்கராஜ், துரை முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள், ஊராட்சி மன்ற செயலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை விராலிமலை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், வள்ளியம்மை, ஊராட்சி மன்ற செயலாளர் கருப்பையா ஆகியோர் செய்திருந்தனர்.

## அரசுப் பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 119 பணியிடங்கள்

# மாற்றுத்திறனாளிகளுக்கு தகுதியுள்ள பணியிடங்களாக மாற்றி அரசாணை வெளியிட்ட முதல்வருக்கு நன்றி!

### மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் ரகமதுல்லா அறிக்கை!

தஞ்சாவூர் அக்.9-

அரசு வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பங்களிப்பை பெரிதும் உயர்த்தும் வகையிலும், அவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் 119 அரசு பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவகையாக அடையாளம் காணப்பட்டுள்ளதை வரவேற்று மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் அ.ரகமதுல்லா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஏற்கனவே மாற்றுத்திறனாளிகளுக்கு கண்டறியப்பட்ட தகுதி உள்ள பணியிடங்கள் அரசாணை எண் 20 வெளியிடப்பட்டு நடைமுறையில் இருந்த வருகிறது. அதனுடைய தொடர்ச்சியாக தற்போது பல்வேறு அரசு துறைகளில் 119 பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகள் பணி புரிவதற்கு தகுதி வாய்ந்த பணியிடமாக மாற்றி அரசாணை வெளியிட்ட தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

கழக அரசு எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்பொழுதெல்லாம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற காலத்தில் மாற்றுத்திறனாளிகள் என்ற தனித்துறையை உருவாக்கி தன்னுடைய நேரடி பார்வையில் வைத்திருந்தார். அதுபோல இன்றைக்கு மு.க. ஸ்டாலின் அவர்களும், மாற்றுத்திறனாளிகள் துறையை தன்னுடைய நேரடி பார்வையில் வைத்து மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு அதிகப்படியான நிதிகளை ஒதுக்கி நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

மாற்றுத்திறனாளிகள் சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்கு தற்போது அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் 119 பணியிடங்கள் அடையாளம் காணப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு வேலைவாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பை நான்கு சதவீதம் உறுதி செய்யும் விதமாக அவர்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை உயர்த்து வகையில் குறிப்பாக கனிம வளம், சட்டம், கூட்டுறவு, ஊராட்சி, நகராட்சி, போக்குவரத்து, நெடுஞ்சாலை துறை, சுற்றுலா, வேளாண் தகவல் தொழில் நுட்பம் ,உள்துறை நிதி, நிர்வாகம், சுகாதாரம், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு வீட்டு வசதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 119 பணியிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள் இப்பணியிடங்களில் விண்ணப்பித்து பணி வாய்ப்பை பெறுவதற்கான ஏற்பாட்டை செய்துள்ளதற்கும், தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு ஆசிரியர் தகுதி தேர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கு 60 சதவீத மதிப்பெண்ணை தகுதி மதிப்பெண்ணாக நிர்ணயம் செய்ய வேண்டும். பல்வேறு துறைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பின்னடைவு காலிப் பணியிடங்களை சிறப்பு தேர்வு மூலம் அனைத்து பணியிடங்களையும் நிரப்ப வேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் ரகமதுல்லா அறிக்கை வெளியிட்டுள்ளார்.



கோவை மாநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் சுமார் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக தன்னை இணைத்துக் கொண்டு பல்வேறு பொறுப்புகளில் திறம்படப் பணியாற்றிய கழக செயல்வீரர், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. தெப்பக்குளம் பகுதி (5 வது பகுதி) முதல் செயலாளர் ஹாஜி ஜே. சிராஜீதீன் வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார். கழக தீர்மானக்குழு செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், கோட்டைமேடு பகுதி திமுக பொறுப்பாளர் வி.ஐ.பதுருதீன், வட்டக்கழகச் செயலாளர்கள் ஏ. அப்பாஸ், அமானுல்லா, ஷாஜகான், லேனா நிசார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் நேரில் சென்று அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தி, அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இராசேந்திரன்

### அக்டோபர் 9 (2023)



தனது இளம் பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கி, 1970 முதல் 2002 வரையிலான 32 ஆண்டுகள் தொடர்ந்து சேத்துப்பட்டு ஒன்றியச் செயலாளர், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினர், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவர் என பல பொறுப்புகள் வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தச்சம்பாடி ஊராட்சி மன்ற தலைவர், போளூர் வீட்டு வசதி வாரிய சங்க தலைவர், பால் கூட்டுறவு சங்க தலைவர் என பல பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.கே. சீனிவாசன்

### அக்டோபர் 9 (1989)



கழகத் தோழர்களால் ‘தத்துவ மேதை’ என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் உறுப்பினர். தி.மு.கழகம் தோன்றிய ஆரம்ப நாள் முதல் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

சிறுகதை எழுத்தாளர். கழகம் நடத்திய மாநாடுகளில் தலைமையேற்றும் – திறந்து வைத்தும் இருக்கிறார்.

1962 விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் மூன்று மாத சிறைத் தண்டனை பெற்றவர்.

1970 முதல் 1976 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், மாநிலங்களவைக்குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**